*21*

# நாற்பது நாட்கள்

## *மத். 28; மாற். 16; லூக். 24; யோவா. 20, 21; அப். 1:1-12*

*1.* **உயிர்த்தெழுதல்.**—மேசியாவின் உயிர்த்தெழுதலானது தீர்க்கதரிசிகளினால் தனிச் சிறந்த வகையில் முன்னுரைக்கப்பட்டிருந்தது (சங். 16:10; ஏசா. 55:3; இ.வ. அப். 2:25-31; 13:34-37), மற்றும் இயேசுவாலேயே இது மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருந்தது (மத். 16:21; 17:9; 20:19; 26:31, 32). ஆனால் கிறிஸ்து உண்மையிலேயே இறப்பவராயிருப்பார் என்ற வகையில் சிந்திக்க முடியாத அல்லது சிந்திக்காத அளவுக்கு சீஷர்களின் சிந்தைகளில் அரசியல் ரீதியான இராஜ்யம் பற்றிய கருத்துக்கள் முன்னதாக ஆக்கிரமித்து இருந்தன. ஆகையால், அவரது மரணமானது அவர்கள் திகைக்கும்படி, மரத்துப் போகும்படி செய்தது. இயேசு சிலுவையில் மரித்த பொழுது அதன் காரணம் என்ன என்பதைக் காட்டிலும் அதிகம் உதவியற்ற வகையில் இழந்து போகப்படும் காரணம் ஒன்று மனிதத் தோற்றத்திற்கு ஒருக்காலும் இருந்ததில்லை. அரிமத்தியா யோசேப்பின் கல்லறையில் இயேசுவின் உடலுடன் சீஷர்களின் நம்பிக்கையும் புதைக்கப்பட்டது. இயேசு உயிர்த்திராதிருந்தால், அவர்கள் நம்பிக்கைகள் ஒருக்காலும் உயிர்ப்பிக்கப்பட்டிருக்காது. இயேசு உயிர்த்திராவிட்டால், உலகம் ஒருக்காலும் அவரைக் கேள்விப்பட்டிராது. பிறப்பு, நபர்த்துவம், உயிர்த்தெழுதல்—இவை மூன்றும்தான் இன்றியமையாத மற்றும் படைப்பாக்கம் கொண்ட அற்புதங்களாக உள்ளன. இவைகள் கிறிஸ்தவத்தின் முழுமையும் போதுமானதுமான திறவுகோல்களாக உள்ளன. ஓய்வுநாள்—அதிர்ச்சியால் தாக்கப்பட்ட சீஷர்களுக்குத் துக்ககரமான ஓய்வுநாள்—கடந்து சென்றது. மங்கலான உதய நேரத்துடன், “சிலுவையினருகில் கடைசி வரையிலும், கல்லறையருகில் முதன் முதலாக” நின்ற—இரு மரியாள்களும் பிற பெண்களுமான—ஒப்புக்கொடுத்தலுள்ள பெண்கள் வந்தனர். அவர்கள், அடக்கம் நடந்த இடத்தைக் கண்டிருந்தனர், ஆனால் முத்திரையைப் பற்றியோ அல்லது காவலைப் பற்றியோ ஒன்றும் அறியாதிருந்தனர். (இயேசு) சிலுவையில் அறையப்பட்ட அன்றிரவு செய்து முடிக்க நேரமற்றுப் போனதால் (செய்யாது விட்டு விட்ட அடக்க முறைமைகளை) செய்து முடிப்பதற்காகப் பரிமள வர்க்கங்களைக் கொண்டு வந்தனர். ஆனால், கல்லறையானது வெறுமையாக இருந்தது! பேதுருவும் யோவானும் சமீபத்தில் இருந்தனர், விரைவிலேயே அவர்களும் கல்லறைக்கு அருகில் வந்தனர். முதலில் அவர்கள் அனைவரும், (இயேசுவின்) உடல் களவாடப்பட்டு விட்டதாகவே நினைத்தனர்; ஆனால் தூதர்களின் தரிசனமொன்று உயிர்த்தெழுதலை வெளிப்படுத்திற்று.

*2.* ***இயேசுவின் பத்து தரிசனங்கள்.****—(1) மகதலேனா மரியாளுக்கு. சீஷர்கள் எப்போதும் இருந்ததை விட அதிகத் திகைப்புடன் சென்றனர். ஆனால் மரியாள் கல்லறையினிடத்திலேயே தாமதித்து நின்றாள். அவளுக்குப் பரவசப் பார்வையில் இயேசு முதன் முதலாகத் தரிசனமானார், மற்றும் சீஷர்களுக்கான ஒரு செய்தியுடன் அவளை அவர் சந்தித்தார். (2) சற்றுப் பிறகு பிற பெண்களுக்கு. இப்பெண்கள் சீஷர்களைத் தேடிச் சென்ற வேளையில் இயேசு இவர்களுக்குத் தரிசனமாகி, தம் சகோதரர் களுக்கு ஒரு செய்தியுடன் இவர்களையும் அனுப்பினார். (3) சீமோன் பேதுருவுக்கு: இது லூக். 24:33, 34ல் தற்செயலாகக் குறிப்பிடப்படுகிறது; மற்றும் பவுலினாலும் (1 கொரி. 15:5) குறிப்பிடப்படுகின்றது. (4) எம்மாவு என்ற ஊருக்குச் செல்லும் வழியில் இரண்டு சீஷர்களுக்கு. அதே நாளில் கிலெயோப்பா என்பவர், இன்னொரு சீஷருடன் சில வேலையினிமித்தம் பயணமாக எம்மாவு என்ற அருகாமைக் கிராமத்திற்குச் சென்றனர். அவர்கள் வெறுமையான கல்லறையைப் பற்றியும், தூதர்களின் தரிசனம் பற்றியும் கேள்விப்பட்டிருந்தனர். அவர்கள் நடந்து கொண்டே, நடந்த நிகழ்ச்சிகளைப் பேசிக் கொண்டிருக்கையில், இயேசு தாமே அவர்களுடன் சேர்ந்து கொண்டு, அவர்களின் கவலைக்கான காரணத்தை அவர்களிட மிருந்தே வரப் பெற்று, தம்மைக் குறித்த தீர்க்கதரிசனங்களைப்பற்றி அவர்களின் (அகக்) கண்களைத் திறந்து வைத்து, கடைசியில் அப்பத்தைப் பிட்கும் வேளையில் அவர்களுக்குத் தம்மை அறியச் செய்தார். அந்த மாலை வேளையிலேயே எருசலேமிற்குத் திரும்பிய அவர்கள், சீமோனுக்கு[1] இயேசுவின் தரிசனம்பற்றி அப்போஸ்தலர்களும் மற்றவர்களும் ஆவலுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். ஏற்கனவே தூண்டப்பட்டிருந்த நெருப்பிற்கு, இவர்களுடைய சொந்த அனுபவங்களும் எரிபொருளைச் சேர்த்திருக்க வேண்டும். இன்னும் அவர்கள் நம்ப முடியாதவர்களாய் இருந்தார்கள். (5) தோமா இல்லாத வேளையில், அப்போஸ்தலர்களுக்கும் மற்றவர்களுக்கும். உணர்வெழுச்சியின் நடுவில், இயேசு தாமே அவர்கள் மத்தியில் திடீரென்று தோன்றினார், மற்றும் “உங்களுக்குச் சமாதானம்”[2] என்ற வாழ்த்துதலினால் அவர்களை வாழ்த்தினார், மற்றும் அவர்களின் அவிசுவாசத்திற்காக அவர்களைக் கடிந்து கொண்டார். தமது உயிர்த் தெழுதல் மற்றும் அவர்களுக்குத் தமது தரிசனம் ஆகியவற்றின் உண்மை நிலையை உறுதிப்படுத்துவதற்கு அவர் (ஆணிகளால்) துளைக்கப்பட்ட தமது கைகளையும் கால்களையும் காண்பித்தார், மற்றும் அவர்களின் முன்னிலையில் உணவு உண்டார். மேற் கூறிய இந்தத் தரிசனங்கள் எல்லாம் இயேசு உயிர்த்த அதே நாளிலேயே நடைபெற்றன. (6) தோமா உட்பட, அப்போஸ்தலர்களுக்கு. தோமா, ஞாயிற்றுக்கிழமை இரவுக் கூட்டத்தில் இராதிருந்தார், அவர் பிறரின் சாட்சியத்தை நம்பவில்லை. ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்கள் எல்லாரும் ஒன்றுகூடியிருந்தனர், இயேசு அவர்களுக்கு மீண்டும் தரிசனமானார். தோமா தமது சொந்தக் கருத்துணர்வுகளின்/ புலன்களின் சாட்சியத்திற்கு இணங்கினார் மற்றும் அவர் (பவுலைத் தவிர) உயிர்த்தெழுதலின் உண்மைக்கு மனமாற்றப்பட்ட கடைசி அப்போஸ்தல ரானார். (7) கலிலேயாவின் கடலில் ஏழு சீஷர்களுக்கு. சீஷர்கள் மீன்*

*பிடித்தல் என்ற தங்களின் பழைய தொழிலுக்குத் திரும்பியிருந்தனர். ஒரு இரவு முழுவதிலும் பலனற்ற வகையில் அவர்கள் கடினமாய் உழைத்த பிறகு, கரையிலிருந்த ஒரு அந்நியரால் தங்களின் வலையை வலது புறத்தில் போடும்படி அறிவுறுத்தப்பட்டனர். அதன் விளைவுகள் அவர்தான் எஜமானர் (இயேசு) என்பதை யோவானுக்கு உடனடியாக வெளிப் படுத்தின; ஆனால் அவரை (இயேசுவை) வாழ்த்துவதற்குப் பேதுருவே முதலில் கரைக்கு நீந்திச் சென்றார். இந்த நிகழ்ச்சியின் போதுதான் இயேசு பேதுருவின் அன்பினுடைய மூன்று மடங்கு வாக்குறுதிகளை அவரிட மிருந்து பெற்றார், இது அவரது மும்மடங்கு மறுதலிப்பின் ரத்தாக இருந்ததென்பதில் ஐயமில்லை. (8) ஐந்நூறு சீஷர்களுக்கு. இது அநேகமாய் அவரது சீஷர்களின் குழுவினர் வாழ்ந்து கொண்டிருந்த கலிலேயாவில் நடந்திருக்கும் (இ.வ. மத். 28:16, 19; 1 கொரி. 15:6). இந்தக் கூட்டம் பற்றிய குறிப்பிட்ட விவரங்கள் எதுவும் நமக்கு கிடைக்கவில்லை. (9) யாக்கோபுக்கு (1 கொரி. 15:7). (10) பரத்துக்கேறுகின்ற வேளையில் ஒலிவ மலையில் அப்போஸ்தலருக்கு. (இயேசுவின்) உயிர்த்தெழுதலில் இருந்து (அவர்) பரத்துக்கேறுதல் வரையிலும், பதிவு செய்யப்பட்டுள்ளவற்றைக் காட்டிலும் மிக அதிகமான முறைகள் இயேசு தமது சீஷர்களுடன் இருந்தார், மற்றும் வரலாற்றுத் துணுக்கில் காணப்படுவதைக் காட்டிலும் அதிகமான அறிவுறுத்தல்களை அவர்களுக்குக் கொடுத்தார். (அப். 1:3ஐக் காணவும்.)*

***3. கடைசிக் கட்டளை.***—*இயேசு தமது கடைசி சந்திப்பிலோ அல்லது தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்னான பல சந்திப்புகளின் பொழுதோ, தமது அப்போஸ்தலர்களுக்கு அவர்களின் நிறைவான/கடைசியான ஊழிய ஆணையை அளித்தார். யோவான் (ஸ்நானன்) செய்த ஊழியம், இயேசுவின் சொந்த ஊழியம், பன்னிருவரின் முதல் ஊழியம், மற்றும் எழுபது பேரின் ஊழியம் ஆகியவை யாவும் தயாரிப்பு நிலைகளாக இருந்தன. "இராஜ்யம் சமீபித்துள்ளது" (இ.வ. மத். 3:2; 4:17; 10:7; லூக். 10:9) என்பதே அவற்றின் செய்தியாய் இருந்தது. அது இஸ்ரவேலுக்கு மட்டும் நிறைவேற்றப்படும்படி கட்டுப்படுத்தப்பட்டிருந்தது (மத். 10:5; 15:24). அப்போஸ்தலர்கள், இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கிக்கக் கூட அனுமதிக்கப்பட்டிருந்த தில்லை (மத். 16:20; 17:9). ஒரு சுவிசேஷம் இருப்பதற்காகவும் அது பிரசங்கிக்கப்படுவதற்காகவுமே கிறிஸ்து வாழ்ந்து, பாடுபட்டு, உயிர்த்து எழ வந்தார். இப்பொழுது ஒன்றைத் தவிர எல்லாக் கட்டுப்பாடுகளும் நீக்கப் பட்டுள்ளன. அவர்கள் நிறைவான மற்றும் இறுதியான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள் - அதாவது, "கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே" (1 கொரி. 15:1-4; 2:1); "படைப்பு முழுவதற்கும்"; கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தின் மூலம், பாவத்தி லிருந்து மனந்திரும்புதல், "சகல ஜாதிகளையும் சீஷராக்கு"தல் ஆகியவற்றின் மூலம் "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவற்றை அவர்கள் போதிக்க வேண்டியிருந்தது."[3] ஆனால் அவர்கள் இன்னமும் முழுமையான தகுதி பெற்றிருக்கவில்லை; ஆகையால் "நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்"[4] (என்று இயேசு கூறியிருந்தார்);*

“நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்”[5] (என்றும் அவர் கூறியிருந்தார்). இப்படிப்பட்ட அர்த்தச் செறிவில்தான் கடைசிக் கட்டளையானது கடந்த பதினெட்டு/இருபது கிறிஸ்தவ நூற்றாண்டுகளாக உலகளாவிய சுவிசேஷ ஊழியமாகச் செய்யப்பட்டு வருகின்றது.

***4. பரத்துக்கேறுதல்.***—“நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்” (யோவா. 16:7). எனவே இயேசு தமது சீஷர்களை ஒலிவ மலைக்கு வழி நடத்திச் சென்றார், மற்றும் “தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.”[6] பரத்துக்கேறுதலானது மேசியாவின் ஊழியத்தின்மீது புத்தொளி பாய்ச்சுகின்றது. அவர்களின் உலகப் பிரகாரமான பழைய கனவுகள் மறையத் தொடங்குகின்றன. மனிதனைத் தேவனிடம் உயர்த்த வேண்டும் என்பதற்காகத் தேவன் மனிதனிடத்திற்கு தாழ இறங்கி வந்துள்ளார். எனவே பதினோருவரும் சந்தோஷமாய் எருசலேமுக்குத் திரும்பினார்கள், மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவிக்காக சீஷர்கள் காத்திருத்தல் என்பதுடன் சுவிசேஷ வரலாறு முடிகின்றது.

---

குறிப்புகள்

[1]பேதுரு. [2]லூக். 24:36; யோவா. 20:19. [3]மத். 28:19. [4]லூக். 24:49; மேலும் அப். 1:4ஐயும் காணவும். [5]அப். 1:5. [6]லூக். 24:50, 51.